RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்




OPEN ACCESS

# பெண்ணிய எழுத்தின் முன்னோடி ராஜம் கிருஷ்ணனின் -கரிப்பு மணிகள்

**து. ஜெமிலா மார்ஷல்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை -37, தமிழ்நாடு, இந்தியா

# Pioneer of Feminist Writing – Karippu Manigal

**D. Jemila Marshal** [a, *],

[a] Department of Tamil, Mar Gregorios College of Arts & Science, Chennai-37, Tamil Nadu, India

* Corresponding Author: jemmarshal@gmail.com

Received: 13-11-2025
Revised: 28-02-2026
Accepted: 11-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Literature, from ancient times to the present day, has consistently articulated the aims and realities of human life. A creative work retains its value when it understands and expresses human emotions without distortion. In this context, the novel “Karippu Manigal” by the eminent feminist writer Rajam Krishnan stands as a significant work. Written after deep, honest field research, the novel closely associates with salt-pan labourers, carefully understanding their spoken language and portraying their sufferings through their own dialect. This article undertakes a study of how the author vividly depicts their hardships, and how she brings to light women’s subjugation along with other social injustices prevalent in society.

**Keywords:** Salt-pan labourers, Feminism, Sufferings, Hardships, Language.

## முன்னுரை

தற்கால கவிஞர்கள் வரிசையில் நேசமித்திரன் மிக முக்கியமானவர். தமிழ்க் கவிதை உலகில் நன்கு அறியப்பட்டவர். எளிய வடிவங்களில், சொற்களில் படிமங்களைப் புகுத்தி கவிதையை அசாதிதியமான தளங்களுக்கு நகர்த்தும் வல்லமை கொண்டவர். இவரது கவிதைகளில் படிமங்கள் மேலையியல் தாக்கங்களைக் கொண்டிருந்தாலும் படிப்பதற்குச் சுவாரசியத்தைத் தருபவையாக தாராளப் பெண்ணியம், மிதவாதப் பெண்ணியம், மார்க்சியப் பெண்ணியம் போன்றவைகளைத் தாண்டி இன்று தீவிரவாதப் பெண்ணியத்திற்குத் தமிழ் படைப்பாளர்கள் நுழைந்துள்ளனர். பின் நவீனத்துவக் கோட்பாடுகளும் பெண்ணிய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தியுள்ளன. இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு இன்று தமிழ் இலக்கிய மரபில் பெண்ணிய சிந்தனை எழுச்சிப் பெற்றுள்ளது. நாவல் இலக்கியங்களில் இத்தகைய பெண்ணியச் சிந்தனைகளுக்கு வித்திட்டவர் ராஜம் கிருஷ்ணனே ஆவார். எழுத்தாளர் என்பவர் எழுத்துக்களால் சமூகத்தைத் தன் வசப்படுத்துபவர். எழுத்தாளுனர் என்பவர் தம் எழுத்துக்களால் சமூகத்தையும் மொழியையும் வளப்படுத்தி, மாற்று சிந்தனைக்கு மானிடனை அழைத்துச் செல்பவர். ராஜம் கிருஷ்ணன் சிறந்த எழுத்தாளுனராக இருந்தமையை அவரது படைப்புகள் எடுத்தியம்புகின்றன.

## பெண்ணியம் -அறிமுகம்

ஒடுக்கப்பட்ட பெண்களின் விடுதலை சித்தாந்தமே பெண்ணியம். ஆணாதிக்கத்தால் அடிமைப்படுத்தப்பட்டு, ஒடுக்கு முறையை வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இனம் கண்டு, அவற்றிற்கு எதிராக இயங்க பெண்கள் முன் வருவதே பெண்ணியம் என்பது அறிஞர்கள் கருத்து.

"இலக்கியம் என்பது பொழுதுபோக்குக்குக் கொறிக்கும் சிறு தீனியாகி விடாது, மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத சத்துணவைப் போல, சமுதாய உணர்வை மக்களிடையே ஊட்ட வேண்டும் என்ற நோக்கமே என்னைப் புதிது புதிதான களங்களுக்கு இட்டுச் செல்கிறது"[1] என்ற ராஜம் கிருஷ்ணனின் வார்த்தைகளே அவரது எழுத்து பணி குறித்த விளக்கத்தைத் தெளிவாக்குகிறது.

இவ்விதம் அவர் எடுத்துக்கொண்ட புதிய களமே தூத்துக்குடி கடற்கரைப் பகுதியில் வாழும் உப்பளத்து பெண் தொழிலாளர்களின் துயரங்கள் ஆகும்.

## கரிப்பு மணிகள் -கதைக்களம்- கதை கரு

தூத்துக்குடி பகுதியில் உள்ள உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கையே கதைக்களம் ஆகும். நாள்தோறும் கொடும் வெயிலில், மழையில் கஷ்டப்பட்டு உப்பை அள்ளும் தொழிலாளர்களின் துயரங்கள், அடிமைத்தனம், ஏற்றத்தாழ்வுகள் நாவலில் விரிவாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

பொன்னுச்சாமி - மருதம்மா தம்பதிகளின் குடும்பம் அனுபவிக்கின்ற துயரங்களே கதைக் கருவாகும். உப்பளங்களில் வேலை பார்க்கும் தொழிலாளிகள் தங்கள் முதலாளிகளை நேரடியாக அறிய மாட்டார்கள். கங்காணிகள், கணக்குப்பிள்ளைகள் வழியாகவே உப்பள நிர்வாகம் நடைபெறும் அவர்கள் ஆண்களிடம் அராஜகத்தையும் பெண்களிடம் பாலியல் சீண்டல்களையும் புரிவர். கண்ணுச்சாமிக்குக் கண் பார்வை மங்கியதில் வேலை போய் விடுகிறது. மன உளைச்சலுக்கு ஆளாகும் கண்ணுச்சாமி தன் முதல் மனைவி செவ்வந்திக்கு பிறந்த மகள் பொன்னாட்சி, மகன் பச்சை முத்துவைப் பார்க்க விரும்புகிறார். இரண்டாம் மனைவியான மருதம்மா அந்தப் பிள்ளைகளை தாய்மாமன் வீட்டில் இருந்து அழைத்து வந்து தங்களது வறுமைக்கிடையே அவர்களையும் மாற்றாந்தாய் என்றில்லாமல் அன்புடன் கவனித்துக் கொள்கின்றாள்.

வறுமையின் காரணமாக பொன்னாட்சியும் பச்சை முத்துவும் உப்பள வேலைக்குச் செல்கிறார்கள். கங்காணி பொன்னாச்சியிடம் தவறாக நடக்க முயற்சிக்கிறான். வாகன ஓட்டி பொன்னாட்சியை கற்பழிக்கின்றான். ராமசாமி என்ற இளைஞன் மட்டும் பொன்னாச்சிக்குப் பாதுகாப்பு கொடுக்கின்றான். இறுதியில் இவளைத் திருமணமும் செய்து கொள்கின்றான். உப்பளத் தொழிலாளர்களை ஒன்று திரட்டி சங்கம் அமைத்து போராட்டம் நடத்துகின்றான் ராமசாமி. பெண்களும் போராட்டத்தில் பங்கு பெறுகிறார்கள். உப்பளத் தொழிலாளர்கள் தங்களுக்கான விடியலை நோக்கி வெற்றி நடை போடுகின்றனர்.

## உப்பளத்தில் பெண்களின் நிலை

### குறைந்த ஊதியம்

உப்பளத்தில் வெயிலில் உப்புக்காற்று பட்டு உடல் கருத்து, தன் உழைப்பை வியர்வையாக சிந்தி, உப்பு மிதித்து கால் வெந்து போய் வேலை செய்யும் பெண்களுக்கு ஆண்களை விட சம்பளம் குறைவாகவே கொடுக்கப்படுகிறது.

“பெண்களுக்கு நான்கு ரூபாய் கூலி ஆண்களுக்கு ஆறு ரூபாய் அதுவும் முழுக்கூலியை கண்ணால் பார்க்க முடியாது.”2 [கரிப்பு மணிகள் - பக்-12] பெண்களை அதிகளவு வேலை வாங்குகின்றனர் சிறிது நேரம் கூட ஓய்வு எடுக்க பெண்களுக்கு அங்கே அனுமதி இல்லை தனது ஆசைக்கு இணங்காத பெண்களுக்குச் சம்பளம் குறைவாக கொடுக்கின்றான் கங்காணி.

"விரிந்து பரந்த பாத்திகளுக்குச் செய்நேர்த்தி செய்யும் கால்கள் அனைத்தும் மனித கால்கள் நீரும் களியும் மணலும் குழம்பிக் குழம்பி மனித ஆற்றலின் வெம்மைகளும் மண்ணின் உட்சூடும் கொதித்து ஆவி யாகிப்போகும் செய்நேர்த்தி உப்பளத்தில் நடக்கிறது. பாதங்கள் கருத்து கன்றிப் புண்பட்டுப் போயின... செறுக்கி மவளுக அழுந்து மறியுங்க கண்காணியின் விரட்டல் கசையடி போல் விழுந்து கொண்டே இருக்கிறது"3 [கரிப்பு மணிகள் -பக்கம் 10].

## கங்காணியின் பாலியல் சீண்டல்கள்

ஆண்களுக்கு உழைப்புச் சுரண்டல் மட்டுமே; ஆனால் பெண் உழைப்பாளிகளுக்கு மனம், உடல் என அத்தனையிலும் சுரண்டல் தான். கங்காணி, கணக்குப் பிள்ளை மூலமாக பெண் தொழிலாளிகள் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாகின்றனர். முக்கிய கதாபாத்திரமான பொன்னாச்சி என்ற இளம்பெண் பாலியல் துன்பங்களுக்கு உள்ளாகிறாள். உப்பள கங்காணி அவளைத் திட்டமிட்டு கெஸ்ட் ஹவுஸிற்கு வரவைத்து அவளிடம் தவறாக நடக்க முயற்சிக்கிறான். "பொன்னாச்சி பருந்தை கண்ட கோழிக்குஞ்சாய் பதுங்கி தோளை போர்த்திக்கொண்டு உள்ளே செல்கிறாள். அங்கிருந்து ஓடிவிட பின் கதவு திறந்திருக்கின்றதா என்று பார்க்கின்றாள் கடவுளே என்று ஓலமிடுகின்றாள்"4 [கரிப்பு மணிகள்- பக்கம் 65] என்ற வரிகள் கங்காணியிடம் இருந்து தப்பித்துக் கொள்ள பொன்னாட்சி படும்பாட்டையும் அவளது உணர்வுகளையும் தெளிவாக உணர்த்துகிறது. உப்பள வாகன ஓட்டி ஒருகட்டத்தில் பொன்னாச்சியை கற்பழித்து விடுகின்றான். கற்பழிக்கப்பட்டவள் என்பதை அறிந்தும் ராமசாமி அவளை திருமணம் செய்வதாக காட்டி இருப்பது ராஜம் கிருஷ்ணனின் மிகச்சிறந்த புரட்சி கருத்தே ஆகும். எந்த ஒரு

எழுத்தாளனும் சொல்லத் தயங்கிய கருத்தை 1976களிலேயே கரிப்பு மணிகளில் வெளிப்படையாக் கூறி பெண்ணிய எழுத்தாளர் என்பதனை நிறுவியவர் நம் நாவலாசிரியர்.

## உப்பள வேலைகளில் இளம் தாய்மார்களின் நிலை

பெண்கள் வீட்டில் தங்கள் கடமைகளைச் செய்து முடித்து உப்பள வேலைக்கு வரும் பொழுது தங்கள் குழந்தைகளைப் பராமரித்துக்கொள்ள வீட்டில் ஆள் இல்லாத காரணத்தினால் உப்பளத்தில் உள்ள மோட்டார் கொட்டகைகளில் குழந்தைகளைக் கிடத்தி, குழந்தை அழும்போது மட்டும் அவசரமாக பாலூட்டச் செல்கின்றனர். அதற்கும் கங்காணி திட்டுகிறார். வீட்டு வேலை, உப்பள வேலை, குழந்தை பராமரிப்பு என்று உழலும் பெண்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட ஆள் இல்லை என்றாலும் அதிகாரம் செலுத்தித் துன்பப்படுத்துகிறது ஆண் இனம். இதனை இயல்பாகச் சித்தரிக்கின்றார் ராஜம் கிருஷ்ணன்.

## உப்பளத்தில் கர்ப்பிணியின் நிலை

நிறைமாத கர்ப்பிணியான அன்னக்கிளி என்ற பெண் உப்பள வேலைக்கு வராவிட்டால் வீட்டில் அடுப்பு எரியாது, என்பதால் தன் உடல் இயலாமையையும் தாண்டி உப்பள வேலைக்கு வந்து மயங்கி விழுகின்றாள்.

"புள்ளத்தாச்சிஅன்னக்கிளி யக்கா மயக்கமா ஒக்காந்துட்டாக தண்ணி வேணும்"5 என்று பொன்னாச்சி தான் உதவி செய்கின்றாள். ஆண்கள் யாரும் உதவ கூட முன் வரவில்லை. அந்த நிலையிலும் வேலை பாதிக்கப்படுகின்றது என்று கங்காணி கோபப்படுகின்றான். இறுதியாக பெண்கள் ஒன்று சேர்ந்து உப்பளத்தில் வைத்தே பிரசவம் பார்க்கின்றனர். அந்த கரிப்பு வெளியில் குழந்தையின் முதல் அழுகை ஒலி கேட்கிறது. பிறந்தது பெண் குழந்தை என்றதும் அனைவரும் முகம் சுளிக்கின்றனர். பெற்றவளே பெண் குழந்தை பிறந்ததற்காக உச்சிக் கொட்டுகின்றாள். நம்மை போல் இந்த குழந்தையும் கஷ்டப்பட வேண்டுமே என்று பரிதவிக்கின்றாள்.

'மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா' - என்ற வரிகளில் உள்ள மாதவம் இங்கு மாசாபமாக எண்ணப்படுவதனை ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் சிறப்பாக பதிவிட்டுள்ளார்.

## பெண்ணியமும் ராஜம் கிருஷ்ணனும்

ஆசாரம் என்ற பெயரில் பழமை வாதங்கள் கடைப்பிடிக்கப்பட்ட தமிழ் பிராமண குடும்பத்தில் பிறந்து பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைக்கப்பட்ட பின்னணியைக் கொண்டவர் ராஜம் கிருஷ்ணன். தன் சிந்தனை எழுச்சியில் எழுந்த பெண் வாழ்வுதனை பத்திரிக்கை வாசிப்பின் மூலம் மெருகேற்றி, பின் படிப்படியாக எழுதத் தொடங்கினவர்.

பெண் குலம் சமூகத்தில் இழி நிலையில் சிக்கி தவிப்புக்குள்ளாவதனைக் கண்டு அதனை களையும் போக்கில் தனது இலக்கிய படைப்புகளை கட்டமைத்தவர் ராஜம் கிருஷ்ணன்.

பெண்களின் அவல நிலையையும் அதற்கான மாற்றுச் சிந்தனைகளையும் தான் படைத்த கதாபாத்திரங்கள் மூலம் சமூகத்திற்குள் ஊடாட விட்டவர் ராஜம் கிருஷ்ணன். 'கரிப்பு மணிகளில்' கற்பு நிலையில், இல்லற வாழ்வில், மறுமணக் கொள்கையில் என்று பல தளங்களில் பெண், ஆணைச் சார்ந்து வாழ்பவளாகவோ ஆணை விட தாழ்ந்தவள் என்றோ கூறப்பட்டு இருக்கும் நம் பண்டைய மரபை மீறி புதிய பெண்ணிய கொள்கைகளை புகுத்தியுள்ளார்.

## கற்பு நிலையில் பெண்ணியம்

சமூகம் ஆணின் ஒழுக்கத்திற்கு எந்த கட்டுப்பாடும் விதிக்கவில்லை. ஆனால் பெண்களுக்குப் பல சட்ட திட்டங்களை வகுத்தது அவற்றுள் ஒன்றே கற்பு.

'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை'- கலித்தொகை

'பெண்ணின் பெருந்தக்க யாவுள' - குறள்

'கற்பு தான் மாதருக்கு அணிகலன்' -என்பன போன்ற விளக்கங்களையும் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறியுள்ளன. ஆனால் பெண்ணிய எழுத்தாளர்களுள் முன்னோடியான ராஜம் கிருஷ்ணன் 'கரிப்பு மணிகளில்' -பெண்ணின் உணர்வுகளை அழகாக பதிவு செய்கின்றார். பொன்னாச்சியை கங்காணி பாலியல் ரீதியாக சீண்ட முற்படுவதும், அதிலிருந்து அவள் தப்பிப்பதும் பணியிடத்தில் பெண்களுக்கு மேலதிகாரிகளால் இழைக்கப்படும் கொடுமைகளைக் காட்சிப்படுத்துகிறது.

வாகன ஓட்டுனரால் பொன்னாச்சி கற்பழிக்கப்படுவதும் அதனை அறிந்த ராமசாமி அவள் மேல் தவறு இல்லை என்பதை புரிந்துக்கொண்டு அவளை திருமணம் செய்ய முன் வருவதும் மிகப் பெரிய புரட்சிகரமான நிகழ்வாகும். 1976களில் இந்த புரட்சி கருத்துக்களைத் தம் நாவலில் கூறுவதற்கே மிகப்பெரிய துணிவு வேண்டும் இத்துணைவு ராஜம் கிருஷ்ணனிடம் இருந்துள்ளது. வேறு ஒருவரால் கற்பழிக்கப்பட்ட பெண்ணை இன்னொரு ஆண் திருமணம் செய்வது என்ற புரட்சியைப் புகுத்தி கற்பு என்பது தெய்வீக ஆற்றல்; மாசற்ற மன உறுதியே கற்பு என்று கற்பு என்ற சொல்லிற்குப் புதிய பொருளை உணர்த்தி பின்னய எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றார் ராஜம் கிருஷ்ணன்.

## இல்லறத்தில் பெண்ணியம்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன, இல்லறத்தில் பெண் எல்லோருக்கும் அடங்கி இருந்து இல்லற பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சங்க இலக்கியங்கள் கூட கூறுகின்றன.

“வினையே ஆடவர்க்கு உயிரே வான் நுதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்”6

[குறுந்தொகை -135]

பொருளாதார உற்பத்தியில் பெண் உழைப்பவளாக இருந்த போதிலும் அதிகமாக வீட்டு வேலைகளில் உட்படுத்துவதையே சமூக விதியாக ஆணாதிக்கம் மாற்றி விட்டது. ஆனால் ராஜம் கிருஷ்ணன் இவ்விதியை மாற்றி அமைக்கின்றார். கருப்பு மணி நாவலில் வரும் பெண் கதாபாத்திரங்கள் அனைவருமே வேலைக்குச் செய்பவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர் வயதில் மூத்த மருதம்மாவும் உப்பள வேலைக்குச் செல்கின்றாள்.

இளம் பெண்ணான பொன்னாச்சியும் வேலைக்குச் செல்கின்றனர். பாலூட்டும் தாயும் கர்ப்பிணி பெண்ணும் கூட தவறாமல் உப்பள வேலைக்குச் செல்பவர்களாக படைக்கப்பட்டுள்ளது. ‘மனையுறை மகளிர்’ என்ற கட்டுப்பாட்டை தகர்த்து எறிந்து விடுவதாக அமைந்துள்ளது.

## மறுமணக் கொள்கையில் பெண்ணியம்

முற்காலப் பெண்கள் ஆண்கள் தனக்கு இழைக்கும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டும் சகித்துக் கொண்டும் வாழ்பவர்களாக இருந்தனர்.

‘இம்மை மாறி மறுமை ஆயினும் நீயாகியரென் கணவனை

யானாகியர் நின் நெஞ்சு நேர் பவளே ‘- [குறுந்தொகை 41]

என்று எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனையிலும் அதே கணவன் தான் வர வேண்டும்.

‘கொண்ட கொழுநன் குடிவரன் உற்றென’ -[ நற்றிணை 110 ]

கணவன் குடிப்பழக்கம் கொண்டவனாக இருப்பினும், கொடுமைப்படுத்துபவனாக இருப்பினும் அவள் அவனை விட்டு நீங்குதல் கூடாது, என்ற பெண்ணடிமை சிந்தனையில் மூழ்கிய சமூகத்திற்கு, ஒத்த கருத்து இல்லாத இருவர் திருமணம் செய்யும்போது எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும்; பிடித்து இன்னொரு வாழ்வு அமைத்துக் கொள்ளும் போது எவ்விதம் வாழ்வு சுகவாழ்வாகும் என்பதனையும் கரிப்பு மணிகளில் படம்பிடித்து காட்டுகின்றார். கரிப்பு மணிகளில் வரும் மருதம்மா என்ற கதாபாத்திரம் குடிக்கார தந்தையிடம் அடிபட்டே தாய் நோயாளியாகிவிட்டதால், இரண்டாம் தாரமாக ஒரு கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவ்வாழ்க்கை பிடிக்காததால் கண்ணுச்சாமியின் காதல் பார்வை பிடித்துப்போக, கட்டிய கணவனை விட்டுவிட்டு மனதிற்குப் பிடித்த கண்ணுச்சாமியுடன் வாழ்வில் இணைக்கின்றாள். கண்ணுச்சாமியை கடைசி வரை அவனது ஆசைகளை நிறைவேற்றி பணம் இல்லை என்றாலும் முழு மனதோடும் முழு அன்போடும் வாழ்கின்றாள். கண்ணுச்சாமியின் முதல் மனைவி செவ்வந்தியும் தன் திருமண வாழ்வு பிடிக்காததினால் குடிகார கணவனைத் தள்ளிவிட்டு தன் சொந்த ஊருக்கே குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்று விடுகின்றாள். பொன்னாச்சி என்ற கதாபாத்திரம் வாகன ஓட்டியால் கற்பழிக்கப்பட்டாலும் ராமசாமி என்ற ஆணை திருமணம் செய்கிறது.

மருதம்மா, செவ்வந்தி, பொன்னாச்சி மூன்று பெண்களுமே ஆணாதிக்க எண்ணம் கொண்ட ஆண்களிடம் இருந்து பிரிந்து தன்மீது அன்பும் அக்கறையும் கொண்ட ஆணுடன் வாழ்க்கையைத் தொடருவதாக இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது மிகப்பெரும் பெண்ணிய பதிவே ஆகும்.

## முடிவுரை

உப்பள தொழிலாளர்களுடன் இரண்டரக் கலந்து அவர்கள் பேசும் மொழியில் கரிப்பு மணிகள் நாவலைப் படைத்துள்ளார் ராஜம் கிருஷ்ணன். உப்பள தொழிலாளிகளுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய குடியிருக்க வீடு, குடிநீர், மருத்துவம், கல்வி, வார இறுதி நாள் விடுப்பு, மாற்றுத்தொழில், முதுமை கால காப்பீடு, எதுவும் இன்றி அப்பாவி மனிதர்களாக இருப்பதை சமூகவியல் நோக்கோடு படம்பிடித்து காட்டியுள்ளார். வட்டாரச் சொற்களை அதிகமாக கையாண்டு நம்மை சொற்பொருள் தேடத்தூண்டியுள்ளார் நாவல் ஆசிரியர். ஆணாதிக்க சமூகம் உருவாக்கி வைத்துள்ள கருத்துக்களைப் புறம் தள்ளிவிட்டு பெண்ணிய சிந்தனைகளை விதைத்துள்ளார். ராஜன் கிருஷ்ணனின் பெண் கதாபாத்திரங்கள் அனைத்தும் மனையுறை மகளிர் என்ற வட்டத்திற்குள் அடங்காமல் ஆணுக்கு நிகராக உப்பளப் பணிகளில் ஈடுபடுபவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். கணவனே கண்கண்ட தெய்வம் என்றில்லாமல் ஒத்த கருத்து இல்லாத ஒருவனோடு வாழ்வது இயலாது என்று, பிடித்து வாழ்வை அமைத்துக் கொள்ளும் புரட்சி பெண்களாக மருதம்மா செவ்வந்தி பாத்திரங்கள் வாழ்ந்துள்ளன.

கற்பு நிலை என்பது உடல் சார்ந்ததல்ல; அது மனம் சார்ந்தது என்பதனை முதன் முதலில் பொன்னாட்சி கதாபாத்திரம் மூலம் நாவலில் நிறுவியவர் ராஜம் கிருஷ்ணன்.

கற்பழிக்கப்பட்டப் பெண்ணை விரும்பி திருமணம் செய்யும் ஆண் கதாபாத்திரத்தைப் [ராமசாமி] படைத்து படைப்பில் புரட்சியை ஏற்படுத்தியவர். 1976களில் இத்தகைய புரட்சியைத் தம் எழுத்துக்களில் படைத்த ராஜம் கிருஷ்ணனின் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ள அரிய நாவலே கரிப்பு மணிகள். பழமையைப் புறந்தள்ளி விட்டு புதுமைக்குப் பாலம் அமைக்கின்ற பணியினை முதலில் தொடங்கியவர் ராஜம் கிருஷ்ணன். அவர் அமைத்த பாலத்தில் இன்றைய பெண்ணிய படைப்பாளர்கள் பயணிக்கின்றனர். ஆனால் பாலம் அமைத்தவர் ராஜம் கிருஷ்ணன் என்பதால் இவரே பெண்ணிய எழுத்தாளர்களின் முன்னோடி என்பது மிகத் தெளிவாகிறது.

## References


ராஜம் கிருஷ்ணன் கரிப்பு மணிகள் நாவல், தாகம் பதிப்பு,

தமிழண்ணல், குறுந்தொகை மூலமும் உரையும்.

அவ்வை துரைசாமி பிள்ளை, புறநானூறு, செவ்விலக்கிய கருவூலம்

எச் வெங்கடராமன், நற்றினை மூலமும் உரையும்

சாமிசிதம்பரனார், தமிழ்நாட்டுப் பெண்களின் உரிமையும் பண்பாடும்


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License.